வேண்டுமென்றும், இனிமேல் பணம் செலவழிக்கப்படாமல் இருக்கக் கூடாது என்றும் அவருக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. 1971-72-ம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட 15 லட்சம் ரூபாயும் செல வழிக்கப்பட்டுவிட்டது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், திருச்சி மாவட்டத்தில் அரிஜனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்கு, விளை நிலங்க ளாக இருந்தால் அதை கட்டாயமாகக் கையகப்படுத்தக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : விளை நிலங்களாக இருந்தாலும், அவை தேவையாக இருந்தால், உரிய தொகை யினைக் கொடுத்து கையகப்படுத்தப்படும்.

குடிசை பகுதிச் சிறுவர்களுக்குப் பயிற்சி முகாம்

* 386 **வினா—திரு. பெ. மலைச்சாமி** : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) சென்னையில் குடிசைப் பகுதிச் சிறுவர்களைச் சீர்திருத் தும் வகையில் காவல் துறையினர் பயிற்சி முகாம் ஏதேனும் நடத்தினார்களா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) 1971-ம் ஆண்டு மே மாதம் 21, 22 மற்றும் 23 தேதிகளில் ஆவடியிலுள்ள டோனிக் கோலா சரகத்திலும் மற்றும் அதே ஆண்டு ஜூலை மாதம் 9, 10 தேதிகளில் பூண்டி அணைக்கட்டிலும் முகாம்கள் நடத்தப்பட்டன.

கோவை மாவட்டத்தில் அரசு தரிசு நிலங்கள்

* 387 **வினா—திரு. என் மருதாசலம்** : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-1971-ல் கோவை மாவட்டத்தில், சர்க்கார் புறம் போக்கு நிலங்கள் மொத்தம் எவ்வளவு ?